[22nd November 1963

* *429 கேள்வி.*—**திரு. செ. கோ. விசுவநாதன்** : *கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1963-ல் செங்கற்பட்டில் தனியார் துறையில் மருத்துவக் கல்லூரி அமைக்க அனுமதி கோரி அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : *(அ) இல்லே.*

(இ) எழாது.

(*a*) No.

(*b*) Does not arise.

நகரசபை பொருட்காட்சி (சேலம்).

* *430 கேள்வி.*—**திரு. எஸ். ஆறுமுகம்** : *கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

1963-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி முதல் சேலம் நகரத்தில் மாரியம்மன் பண்டிகையை முன்னிட்டு பொருட்காட்சி நடத்த அந்நகராட்சிக்கு அனுமதி வழங்காததற்குக் காரணமென்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : *சேலம் நகராட்சி மன்றத்திற்கு 1963-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி முதல் பொருட்காட்சி நடத்த அனுமதி மறுக்கப்படவில்லே.*

சுங்கவரி வசூல்

* *431 கேள்வி.*—**திரு. கரு. சீமைச்சாமி** : *கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) சமீபத்தில் ராமநாதபுரம் ஜில்லா திருப்புவனம் வைகை ஆற்றில் கட்டப்பட்ட பாலத்திலிருந்து டோல்கேட் வரி வசூல் செய்வது சம்பந்தமாகவும் டோல்கேட் வரி வசூல் செய்யும் திட்டத்தையே நமது மாகாணம் பூராவும் ரத்து செய்யும்படியும் திருப்புவனம் பஞ்சாயத்து யூனியன் தலேவரிடமிருந்து ஏதாவது விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) ஆம் என்றல் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : *(அ) இல்லே.*

(இ) இக் கேள்விக்கு இடமில்லே.

திரு. கரு. சீமைச்சாமி : *ஸார், நான் கேட்ட கேள்விக்கு இல்லே என்று பதில் சொன்னர்கள். அரசாங்கத்திடம் இருந்து எனக்குப் பதில் வந்திருக்கிறது. மதுரைக்கு அருகில் கட்டப்பட்டுள்ள*